# சீர்காழி நகராட்சி



**2019 –ம் ஆண்டு நவம்பர் மாதம் 21.11.2019 வியாழன் கிழமை காலை 11.00 மணிக்கு சீர்காழி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரனக் கூட்ட நடவடிக்கை.**

முன்னிலை.திரு.S. வசந்தன்.B.E.MBA.,
தனி அலுவலர் (ம) ஆணையர்(பொ)
சீர்காழி நகராட்சி.

பொ
ருள்
ண்-1

சீர்காழி நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளில் உள்ள தெருக்களில் உள்ள மின் கம்பங்களில் புதியதாக LED விளக்குகள் (With Clamp Set) அமைத்திட கீழ்கண்ட இடங் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | வார்டு எண் | தெரு பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 1 | புளிச்சக்காடு மேலத்தெரு | 3 |
| 2 | 1 | இனாம் குனத்தலப்பாடி | 2 |
| 3 | 4 | காமராஜ் அவென் 4 வது தெரு | 4 |
| 4 | 6 | சிதம்பரம் ரோடு குளத்துமேட்டு தெரு | 5 |
| 5 | 6 | புலிக்குடி சின்ன பள்ளிவாசல் தெரு | 5 |
| 6 | 6 | புலிக்குடி சலீம் தெரு | 6 |
| 7 | 20 | M.R ராதா நகர் | 4 |
| 8 | 20 | VNP நகர் | 4 |
| 9 | 21 | வீரம்மாள் நகர் | 3 |
| 10 | 13 | SKR நகர் | 3 |
| 11 | 22 | துறையூர் ரோடு | 10 |
| 12 | 21 | NGGO நகர் | 1 |
| 13 | 21 | VSR நகர் | 3 |
| 14 | 20 | கணபதி நகர் | 17 |
| கூடுதல் | | | 70 |

மேற்படி 70 இடங்களில் பொது மக்களின் நலன் கருதி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் அறிவுறையின் படி LED விளக்குகள் (With Clamp Set) as per ESCORW Agreement Dated-06.12.2017 ன் படி புதியதாக பொருத்தி பராமரிப்பு பணி மேற்கொள்ள தெரு விளக்கு பராமரிப்பு செய்து வரும் Sabari Electrical. No.5. Kathiresan Street. Gannamoorthi Nagar, Ambatur, Chennai நிறுவனத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.80 இலட்சத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து பணி மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு 1.மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்–3487/2019/இ1)

நகர்மன்ற தீர்மான எண்–414 நாள்.21.11.2019. அனுமதிக்கப்படுகிறது.

<table>
<tr>
<td>பொருள் எண்-2</td>
<td>சீர்காழி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நுண்உரம் தயாரிக்கும் MCC பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்-22866/D3/2018 நாள்-23.08.2018 ன் படி சீர்காழி நகராட்சியில் MCC அமைக்கும் பணிக்கு ரூ.76.00 இலட்சமும், BOV விநியோகம் செய்யும் பணிக்கு ரூ.3.60 இலட்சமும் மற்றும் LCV விநியோகம் செய்யும் பணிக்கு ரூ.11.20 இலட்சமும் ஆக கூடுதல் ரூ.90.80 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு இந்நகர் மன்ற தீர்மான எண்-222 நாள்- 18.06.2018 ன் படி அனுமதிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிமேற்கொள்ளப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்-9018/P3/2018 நாள்-23.08.2018 ன் படி MCC அமைக்கும் பணிக்கான 7th SHPC மத்திய அரசின் நிதி விடுவிக்கும் போது வரிசை எண் 47 ல் சீர்காழி நகராட்சிக்கு 76.00 இலட்சத்திற்கு பதில் ரூ.71.00 இலட்சம் மதிப்பீட்டு தொகை எனவும் அதில் மத்திய அரசு பங்கு தொகையாக 35% ரூ.27.85 இலட்சம் எனவும், மாநில அரசு பங்கு தொகையாக 55% ரூ.39.05 இலட்சம் எனவும் மற்றும் நகராட்சி பங்களிப்பாக 10% ரூ.7.10 இலட்சம் எனவும் தெரிவிக்கப்பட்டு அந்த கடிதத்தின் மூலம் மத்திய அரசின் மான்ய தொகை 35% ரூ.27.85 இலட்சம் விடுவிக்கப்பட்டது தற்போது ரூ.76.00 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவடையும் தருவாயில் உள்ளதால் மீதமுள்ள ரூ.5.00 இலட்சத்தை நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொண்டு 7th SHPC நிதி வரப்பெற்ற உடன் பொது நிதியில் ஈடு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்–1190/2018/இ1)<br>**நகர்மன்ற தீர்மான எண்–415 நாள்.21.11.2019. அனுமதிக்கப்படுகிறது.**</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-3</td>
<td>இந்நகராட்சிக்கு 2019-2020 ம் ஆண்டிற்கு அலுவலக உபயோகத்திற்கு தேவைவையான எழுது பொருட்கள் மற்றும் கனிணி மையத்திற்கு தேவையான கனிணி பொருட்கள் மற்றும் படிவங்கள் பதிவேடுகள் திருச்சியில் உள்ள தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட் கோ சர்விஸ் திருச்சியில் வாங்கிக் கொள்ள உத்தேச செலவினம் தொகை ரூ. 3,00,000/- (மூன்று லட்சம்) மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .<br>அலுவலக குறிப்பு -அனுமதி வழங்கல். (ந.க.எண் 1126/2019 D2 )<br>**நகர்மன்ற தீர்மான எண்–416 நாள்.21.11.2019. அனுமதிக்கப்படுகிறது.**</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-4</td>
<td>சீர்காழி நகராட்சி பொது நிதி –2019–2020 திட்டத்தின் கீழ் சீர்காழி நகராட்சி அலுவலகத்தில் உள்ள உட்கட்டமைப்பு வசதியினை சரி செய்திடவும் மற்றும் பொது பிரிவு, வருவாய் பிரிவு மற்றும் சுகாதார பிரிவுகளில் கூடுதலாக இருக்கைகள், பீரோ மற்றும் டேபிள்கள் தேவைபடுகின்றது எனவே இவற்றை புதியதாக வாங்கிட கோரி நகராட்சி அலுவலர்களால் நேரடியாக ஆணையரிடம் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர் அவர்களால் நேரடி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு நகராட்சி அலுவலகத்தில் கூடுதலாக உட்கட்டமைப்பு வசதி செய்திடவும் மற்றும் கூடுதல் இருக்கைகன், பீரோ மற்றும் டேபிள்கள் விநியோகம் செய்திடவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.8.00 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3621/2019/இ1)<br>**நகர்மன்ற தீர்மான எண்–417 நாள்.21.11.2019. அனுமதிக்கப்படுகிறது.**</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-5</td>
<td>சொத்துவரியினை 01.04.2018 முதல் சீராய்வு செய்திட வெளியிடப்பட்ட அரசாணை எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.07.2018 மற்றும் அரசாணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவைகளை நிறுத்தி வைத்து, சொத்துவரி சீராய்விற்கு முந்தைய சொத்துவரியினையே வழங்கிடவும், சொத்துவரி சீராய்வு குறித்து அரசு செயலாளர், நிதித்துறை அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழுவின் பரிந்துரையின் பேரில் அரசினரால் சொத்துவரி சீராய்வு குறித்து முடிவு செய்யப்படும் என வெளியிடப்பட்ட அரசாணை எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-IV) துறை, நாள்.19.11.2019 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr>
<td>அலுவலக குறிப்பு</td>
<td>பதிவு செய்யலாம். மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 20.11.2019–ம் தேதிய சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்.1–ல் குறிப்பிட்டவாறு சொத்துவரி மண்டலங்கள் பகுப்பாய்வு மற்றும் 2017–18–ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட</td>
</tr>
</table>
</td>
</tr>
</table>

| | |
|---|---|
| | சொத்துவரி மறு அளவீடுகள் ஆகிவைகளையும் நிறுத்தி வைத்திட தெரிவிக்கப்பட்டு உள்ளதையும் பார்வையிட்டு பதிவு செய்யலாம். |

ந.க.எண்.2395/2018/அ.1

**நகர்மன்ற தீர்மான எண்—418 நாள்.21.11.2019. அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்-6

வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக டெங்கு காய்ச்சல், சிக்கன்குன்யா போன்ற நோய்கள் முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நகரில் வழக்கமான துப்புரவு பணிகளை மேற்கொள்வதற்கு மிக குறைந்த அளவு மட்டுமே நிரந்தர துப்புரவு பணியாளர்கள் உள்ளதால் அப்பணியாளர்களை கொண்டு டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது எனவே தற்காலிக பணியாளர்களை தினக்கூலி விகிதத்தில் பணிக்கு பயன்படுத்தி நோய்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது என்பது மட்டுமே சாத்தியமானதாக உள்ளது.

எனவே மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்ணயித்துள்ள தினக்கூலி விகிதத்தில்(Market Rate)நாள் ஒன்றுக்கு , நபர் ஒன்றுக்கு ரூ310/- என்ற விகிதத்தில் 15 DBC பணியாளர்களை தற்காலிக தினக்கூலி அடிப்படையில் 1.9.2019 முதல் 31.12.2019 வரை பணிக்கு அமர்த்தி பணி நடைபெற்று வருகிறது.

மேலும் நகராட்ச்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர். அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரை நாள் 22.10.2019-ன்படி 9,750/- விகிதத்திற்கு மேற்கண்ட DBC பணியாளர்கள் போதாது எனவும் மேற்கொண்டு 18.11.2019 முதல் 31.12.2019 வரை 15 DBC , பணியாளர்களை தற்காலிக தினக்கூலி அடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்ணயித்துள்ள தினக்கூலி விகிதத்தில்(Market Rate)நாள் ஒன்றுக்கு , நபர் ஒன்றுக்கு ரூ.310/- என்ற விகிதத்தில் பணிக்கு அமர்த்தி டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்வதற்கும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.2,05,000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(அ – கு )1.மன்றம் அனுமதி வழங்கலாம்

2.மழைக்காலம் என்பதால் அவசர அவசியம் கருதி பணி செய்திட ஏதுவாக தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணிஆணை வழங்கவும்,பணிகள்மேற்கொள்ளவும். மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் : 2187/2019/எச்1)

**நகர்மன்ற தீர்மான எண்—419 நாள்.21.11.2019. அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்-7

இந்நகராட்சியின் குடிநீர் திட்ட நிதி -2019-20 -ன்கீழ் சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள தெருக்களில் குடிநீர் விநியோக குழாய் உடைப்புகளை சரிசெய்யும் பணி செய்திட 06.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகை | ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்த மதிப்பீட்டைவிட |
|---|---|---|---|---|
| 1 | ஆர். தனராஜ் ஒப்பந்ததாரர் சீர்காழி | ரூ.442082.60 | ரூ.441530.00 | (-) 0.12 % (குறைவு ) |
| 2 | ஆர். கலைவாணன் ஒப்பந்ததாரர் சீர்காழி | | ரூ.446278.00 | (+) 0.95 % ( அதிகம் ) |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஆர்.தனராஜ் ஒப்பந்ததாரர் ,சீர்காழி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்த மதிப்பீட்டைவிட (-) 0.12% குறைவாக உள்ளதால் இதனை ஏற்று பணி உத்திரவு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்-2858/2019/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்—420 நாள்.21.11.2019. அனுமதிக்கப்படுகிறது.**

(ஒம்) முன்னிலை.திரு.S. வசந்தன்.B.E.MBA.

இடம்–சீர்காழி தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)
நாள்–21.11.2019 /உண்மை நகல்/ சீர்காழி நகராட்சி.

ஆணையர்(பொ),
சீர்காழி ந கராட்சி.

# சீர்காழி நகராட்சி



**2019 –ம் ஆண்டு நவம்பர் மாதம் 29.11.2019 வெள்ளி கிழமை காலை 11.00 மணிக்கு சீர்காழி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரனக் கூட்ட நடவடிக்கை.**

முன்னிலை.திரு.S. வசந்தன்.B.E.MBA.,
தனி அலுவலர் (ம) ஆணையர்(பொ)
சீர்காழி நகராட்சி.

**பொருள் எண்-1**

சீர்காழி நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு (கூருசுஜீ) நிதி திட்டம் 2019-2020 ன்கீழ் ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் தார் சாலைகள் மற்றும் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது மேற்படி பணிக்கு 15.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த மதிப்பீட்டைவிட |
|---|---|---|
| 1 | M/S A.Subramanian&co.,<br>No.62, Kamarajar Road, MK Kottai,<br>Trichy-620011 | (+) 4.94 % அதிகம் |
| 2 | Thiru.R.Vellaisamy,<br>No 9/75C, Madurai Veeran samy kovil street,<br>Khaja Nagar, Trichy-620020 | (+) 5.03 % அதிகம் |

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் அதிகத்தில் குறைவாக (+) 4.94% கொடுத்துள்ள M/S A.Subramanian&co., நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

3) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்-17349/2019/இ3 நாள்-03.09.2019 ன்படி அரசு மானியம் போக நகராட்சி பங்கு தொகையை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளலாம். (ந.க.எண்-2858/2019/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்–420 நாள்.29.11.2019. அனுமதிக்கப்படுகிறது.**

(ஒம்) முன்னிலை.திரு.S. வசந்தன்.B.E.MBA.
தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)
சீர்காழி நகராட்சி.

இடம்–சீர்காழி
நாள்–29.11.2019

/உண்மை நகல்/

ஆணையர்(பொ),
சீர்காழி ந கராட்சி.